

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

ப.பிரதாப்



"காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை"

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 819379638-1
9788193796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 54. அறநூல்கள் காட்டும் காலச் சூழல்

பா. சூரியப்பிரகாஷ்
முதுகலைத் தமிழ் இலக்கியம்
என்.ஜி.எம் கல்லூரி,
பொள்ளாச்சி.

## முன்னுரை

தமிழ் இலக்கியக் காலகட்டத்தில் சங்க இலக்கியக் காலமே முதன்மையானதாகும். சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கை முறையை, அவர்களின் பண்பாட்டைப் படம் பிடித்துக்காட்டும் ஓர் கருவியாக அமைந்தன. ஆனால் அவற்றுக்குப் பின் தோன்றிய பதிணென்கீழ்கணக்கு நூல்கள் மக்களிடையே அறத்தையும், நீதிக் கருத்துக்களையும் பரப்புவனவாகவே அமைந்திருந்தன. சங்க இலக்கியங்களிலும் அறக்கருத்துக்கள் கூறப்பட்டிருந்தாலும், பதிணென் கீழ்கணக்கு நூல்கள் தோன்றிய காலச்சூழல் அறத்தை முழுமையாக வலியுறுத்தும் காலமாகவே அமைந்திருந்தது.

## நீதி நூல்களின் தன்மை

இலக்கியம் இன்புறுத்துதலோடு நின்று விடாமல், பல நேரங்களில் அறிவுறுத்தலையும் செய்கின்றது. கி.பி. 3ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மனித கலத்தின் பல்வேறு தவறான நிலைகளை எடுத்துரைத்தும், மனிதகுலம் நன்முறையில் வாழ வேண்டிய வழி குறித்தும் பதிணென்கீழ்கணக்கு நூல்களின் பெரும்பகுதி நீதிநெறியை எடுத்துரைக்கும் இலக்கியங்களாகவே உள்ளன.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப"

(கற்பியல்-143)

எனும் தொல்காப்பியரின் வாக்கினைப் போலவே, நாட்டில் அறம்

நலிந்தும், குற்றங்கள் பெருகியும் காணப்பட்ட போது நீதி நூல்கள் தோன்றி, அறத்தை அனைவரிடத்தும் கொண்டு செலுத்தின.

## அறத்திற்கே முதன்மை

சங்க இலக்கியங்கள் மனித வாழ்க்கையை அகம், புறம் எனப் பகுத்த போது, திருவள்ளுவர் மனித வாழ்க்கையில் அறத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார்.

"அழுக்காறு அவாவெகுளி இன்னாசொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறன்." (குறள்-35)

கோபமும், கடுஞ்சொல்லும் ஆகிய நான்கினையும் நீக்கி செய்யப்படும் செயலே அறம் என்று குறிப்பிடுகின்றார் வள்ளுவப் பெருந்தகை.

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பழப்பது இல்லாயின் நன்று." (குறள்-49)

என்று பிறரால் பழிக்கப்படாமல் வாழும் இல்வாழ்க்கையே அறம் என்று திண்ணமாகக் கூறுகின்றார்.

## பற்று நீக்கும் நிலையாமை

மக்கள் செல்வத்தின் மீதும் பல்வேறு பொருட்களின் மிதும் வைத்திருந்த பற்றையெல்லாம் நீக்கி எதுவும் இல்வாழ்வில் நிலையில்லை என்பதனை நாலடியார்,

"அறுசுவை உண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கி உண்டாரும் - வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் தழ் எனின் செல்வம் ஒன்று
உண்டாக வைக்கற்பாற்று அன்று."

என அறுசுவை உணவை அருமையென மனைவி அருகே இருந்து, விரும்பி உண்பிக்கவும், தம் வளமைப் பெருக்கால் மற்றொரு கவனம் வேண்டாம் என்று விலக்கி உண்பவரும். ஒரு காலத்தில் வறுமையடைந்து மற்றோரிடத்து இரந்து உண்பான் என்றால் 'செல்வம்' நிலைக்கத்தக்கது அல்ல என்று வலியுறுத்துகிறது.

## நான்மணிக்கடிகை காட்டும் அறம்

"எள்ளற்க என்று மெளியாறென் றென்பெறினும்
கொள்ளாற்க கொள்ளார்கைம் மேலவே — உள்சூடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைத்து"

என்று, இவர் எளியவர் என்று எவரையும் இகழ்தல் கூடாது என்னதான் சிறந்தது, வேண்டத்தக்கது என்றாலும் பெறக்கூடாதவரித்தும் பெறுதல் கூடாது. மனம் வருந்தச் செய்தாலும் இழிந்த குடியில் பிறந்தவரை சிறுதல் கூடாது. எவரிடத்தும் கூறக்கூடாதவற்றைப் பொறுப்பின்றிக் கூறக் கூடாது என்று குறிப்பிடுகிறது.

## புலால் மறுத்தல் மற்றும் கள்ளுண்ணாமை

சங்க இலக்கியங்கள் பலவும், மக்களின் புலால் உண்ணும் பழக்கம் பற்றிக் காட்டுகின்றன.

"பைம் நிணம் ஒழுகிய நெய்ம் மலி அடிசில்"

"ஊண் துவை அடிசில்"

ஆகிய வரிகள்,

அதுபோலவே மன்னனும், படை வீரர்களும், கள்ளுண்டு களித்திருத்தலையும் நமக்குக் காட்டுகின்றன. ஆயினும் பிற்காலத்தில் வந்த நீதி நூல்கள் பலவும் இவையிரண்டும் தவறென்னும் கொள்கையை உறுதியாகப் பறை சாற்றியிருக்கின்றன.

"கொல்லான் புலால் மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்."

எனும் வள்ளுவரின் குறட்பா, கொலை செய்யாதும், பறவை விலங்குகளைக் கொன்று திண்ணாத வாழ்வையும், எல்லா உயிரிகளும் தொழக்கூடிய வாழ்வு என்று காட்டுகிறார்.

## ஆசாரக்கோவையின் கட்டளைகள்

ஒவ்வொரு நாள் வாழ்விலும், ஒருவர் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழும் முறையை ஆசாரக்கோவை நவில்கிறது. தனிமனித வாழ்க்கை முறை நெறி தவறிப் போன காலத்தில் இந்நூல் தனிமனித ஒழுக்கம் சிறக்க உருவாக்கப்பட்டது.

"வைகறை யாமம் துயில் எழுந்து தான் செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுது எழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை"

அதிகாலையில் விழித்தெழுந்து தான் ஆற்ற வேண்டிய அறச்செயல்கள், பொருள் ஈட்டும் வழிகள் முதலிய நற்செயல்களை எண்ணித் திட்டமிட்டு தந்தையையும், தாயையும் வணங்கி எழுந்து கடமையாற்றப் புறப்படல் வேண்டும் என்பவை முன்னோர் வகுத்த நல்வழிகளைச் சுட்டிக்காட்டுகின்றது.

### பழமொழி நானூறு

தமிழில் பழமொழிக்கென்றே தோன்றிய நூல்கள் இரண்டு, அதில் ஒன்று பழமொழி நானூறு, மற்றொன்று பழமொழி விளக்கம், இந்நூலில் கல்வி ஒழுக்கம், சமயம் போன்ற பல்வேறு துறைகள் பற்றிய பழமொழிகள் கூறப்பட்டுள்ளன.

"பொல்லாத சொல்லி மறைத்தொழுகும் பேதைகள்
சொல்லாலே தன்னைத் துயர்படுத்தும்- நல்லாய்
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலும் தன் வாயால் கெடும்"

எனப் இப்பாடலில் உள்ள பழமொழி இன்றளவும் வழக்கில் உள்ளது. தன் குரலை வெளிப்படுத்தி, பாம்பிடம் மாட்டிக் கொள்ளும் தவளையைப் போல், பேதை ஒருவன் தன் வாயால் தனக்கு தீங்கு தேடிக்கொள்வான் என்று நாவடக்கத்தை வலியுறுத்துகிறது.

## முடிவுரை

மக்களுக்கு பல்வேறு வாழ்க்கை முறைகளைச் சொல்லித்தர வேண்டிய கட்டாயம் களப்பிரர் காலத்தில் இருந்த போது, அத்தகு காலச் சூழலில் அற இலக்கியங்கள் அதிகமாகத் தோன்றி, மக்களை நல்வழிப்படுத்தின என்பதை அற இலக்கியங்கள் கூறும் கருத்துக்களின் மூலம் உணரலாம்.